**O.S.No.345/2010**

**Date:08.10.2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 3 - சக்திவேல், த-பெ.மூக்கையன் மூப்பனார்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். (7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மகன் புதுப்பட்டி ஊராட்சிமன்ற தலைவராக இருக்கும் போது கோவில் திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். என் மகன் 7ம் பிரதிவாதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.632-1987ல் இந்த வழக்கில் யார், யார் மரியாதைக்குரியவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த தீர்ப்பில், 5, 6 பிரதிவாதிகள் மற்றும் அவர்களின் முன்னோர்கள் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதிகள் மொத்தம் எத்தனை பேர் என்றால் 14 பேர் ஆவார்கள். அவர்களில் களஞ்சியம் என்பவர் என்னை விட வயதில் மூத்தவர் என்றால் இரண்டு வயது மூத்தவர். அவருக்குப் பின்னர் யாரை விசாரித்தார்கள் என்றால் மொக்கை இளங்கான் என்பவரை விசாரித்தார்கள். அவரும் என்னை விட வயதில் மூத்தவர் என்றால் சரிதான். அவருக்கு கிராம நடப்புகளில் யாருக்கு என்ன மரியாதை என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். வாதிகள் அனைவரும் 5, 6 பிரதிவாதிகளுக்கு மரியாதை இருப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சொல்லியிருப்பார்கள். நான் புதுப்பட்டி கிராமத்தை புர்வீகமாக வசித்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. 5 மற்றும் 6 பிரதிவாதிகள் வீட்டிற்கும், என் வீட்டிற்கும் 100 அடி தூரம் இருக்கும் என்றால் 200 அடி தூரம்இருக்கும், தாவா கோவிலீல் 3ம் மரியாதை எனக்குப் பாத்தியம் என்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகளுக்கு மரியாதை இல்லை என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. 7, 8 பிரதிவாதிகள், 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு மரியாதை இல்லை என்று அவர்கள் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், 11, 12 பிரதிவாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். 1 முதல் 3 மற்றும் 11, 12 பிரதிவாதிகள் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் பெரிய சம்சாரி வகைக்குத்தான் மூன்றாம் மரியாதை என்றால சரிதான். 5, 6 பிரதிவாதிகள் பெரிய சம்சாரி வகையறாவில் கோடாங்கி பிடாரன் வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. நான் பெரியசம்சாரி வகையறாவில் மொக்கமூப்பனர் வகையைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். தாவா கோவிலில் ஊருக்கு தெற்கே உள்ள கருப்புசாமி கோவில், மந்தைச்

சாவடி, மந்தையம்மன் கோவிலில் மரியாதை உள்ளது என்றால் ஐந்து கோவிலிலும் நாங்கள் மரியாதை வாங்கி வருகிறோமத். ஊருக்கு தெற்கே உள்ள கோவில்களில் மட்டும்தான் எங்களுக்கு மரியாதை என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் ஊருக்கு வடக்கே உள்ள அய்யனார் கோவில், தெப்பக்குளம் மற்றும் கண்மாய் மரியாதை உண்டு என்றால் இல்லை. நான் சொல்லும் வழக்கு தீர்ப்புகள் நான் தாக்கல் செய்யவில்லை, வாதிகள்தான் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். இந்த வழக்கு தீர்ப்புகளில் என் பெயர் உள்ளதா என்றால் இல்லை, என் அப்பா மற்றும் அண்ணன் பெயர்கள் உள்ளது. என் அப்பா மற்றும் அண்ணன் பெயர் உள்ளதை உறுதி செய்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. மொக்கஇளங்கான் என்ற பெயர் நான் சொல்லும் வழக்கு தீர்ப்பில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளுக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்சரியல்ல. எனவேதான் அந்த தீர்ப்புகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகன் தேர்தலில் நின்றால் என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் என் மகனுக்கு எதிராக வேலை பார்த்தார்கள் என்றால் இல்லை, 7, 8 பிரதிவாதிகள்தான் பார்த்தார்கள். 5, 6 பிரதிவாதிகள் என் மகனை எதிர்த்து வேலை பார்த்ததால், நான் அவர்கள் ஆண்டாண்டு காலமாக வாங்கி வரும் மரியாதையைஇல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரும்பனூர் கூட்டுறவு வங்கியில் வைப்பீட செய்யப்பட்டதில் என் பெயர் இல்லை என்றால் இல்லை. ஊர் மரியாதைக்கும், எனக்கும் தொடர்பில்லாததால் என் பெயர் இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக வங்கிக் கணக்குகள் ஊர் மரியைாதைகாரர்கள் பெயர்களில் தொடங்குவார்கள் என்றால் சரிதான். நான் 5, 6 பிரதிவாதிகளின் மரியாதை மறுப்பதற்கு எனக்கு எந்த விதமான அருகதையும் இலஷ்ல என்றால்சரியல்ல. என் வழக்கானது வாதிகளை எதிர்த்து இல்லாமல், 5, 6 பிரதிவாதிகள் மீது உள்ள பகை காரணமாக அவர்களை எதிர்த்து பொய்யாக சாட்சியம் நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

**<u>11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

11, 12 பிரதிவாதிகள் எங்கள் வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பெரியசம்சாரி வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் என்ன வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் பெரியசம்சாரி வகையில் அவர்களுக்கு இடம் இல்லை, வாதிகள் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் நாட்டாமை வகையைச் சேர்ந்தவர்கள். 2ம் பிரதிவாதி 2ம் மரியாதைகாரர் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் தாவா கோவிலில் உரிய மரபு மாறாமல் கிராம முறைப்படி திருவிழா நடத்துவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது என்றால் சரிதான்.

(வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா மாற்றப்படுகிறது)